*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

ISSN: 2456 – 4613
Volume – V Issue – 2
May -2021

# சமூக நோக்கில் திருடப்பட்ட தேசம்

**செல்வஈஸ்வரி, கு.**
**தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்,**
**எஸ்.எஃப்.ஆர்.மகளிர் கல்லூரி,**
**சிவகாசி.**

**Corresponding author :selvaanand2008@gmail.com**

**ஆய்வுச்சுருக்கம்**

'சிறுதுளி பெருவெள்ளம்' எனும் கூற்றுக் கிணங்க இன்றைய சமூகத்தில் விழிப்புணர்வோடு செயல்பட்டால் தான் நம்மை நாம் பாதுகாக்க முடியும். கண்களுக்குப் புலப்படும் பிரச்சனைகளை மக்களிடம் சென்று விமர்சித்துத் தீர்வுகாணும் வண்ணம் தற்கால இலக்கியங்கள் உருவாக்கப்படுகின்றன. அந்த வகையில் திருடப்பட்ட தேசத்தினை மீட்டெடுக்கப் போராடும் கவிஞனின் உன்னத எண்ணமே இக்கவிதையின் பிரதிபலிப்பாகும். அடிமை விலங்கை அகற்றவும், உடைமைகளை மீட்கவும், நாட்டிற்காகப் போராடும் மனிதனின் உள்ளக்கிளர்ச்சிக்குத் தூண்டுகோலாய் இக்கவிதைப் படைக்கப்பட்டுள்ளது.

**குறிப்புச்சொற்கள்:** சமூகம்–விழிப்புணர்வு–பிரச்சனை - பகிர்ந்து வாழ்தல்–சாதி–வன்போர் - காடுகளின் அழிவு–சுனாமி–தீர்வுகாணுதல்.

**முன்னுரை**

மனித வாழ்வின் நடைமுறைகள் அனைத்தையும் சமூகம் தீர்மானிக்கின்றது. பிறப்பு முதல் இறப்பு வரை பரிணாம வளர்ச்சி சார்ந்த நடப்பியல் அன்றாடம் பின்பற்றப் பெறுகின்றது. வெற்றி தோல்விகளை நிர்ணயிக்கும் வாழ்வானது நற்தேசத்தின் பின்புலமாக இயங்கும். அத்தகு இலக்கை அடைய பல்வேறு தடைகளைத் தகர்த்து எறிந்து போராடுபவனே பின்னாளில் தலைவனாக மதிக்கப் பெறுவான். தன்நிலை மாறாமல் தன்பண்பாட்டைப் பாதுகாத்து வாழும் மனித சமூகத்தின் பிரச்சனைகளை ஆராயும் நோக்கில் இக்கவிதை அமைகின்றது. திருடப்பட்ட தேசங்களை எப்படியெல்லாம் மேம்படுத்தலாம் என்பது பற்றிய எதிர்ப்பினை தனது கவிதையில் க.சேவியர்ராஜப்பா அவர்கள் பதிவுசெய்துள்ளார். தேசம் பற்றித் தாகூர்

கூறுகையில்,

**"இதயம் எங்கே அச்சமின்றி உள்ளதோ,
எங்கே தலை நிமிர்ந்து நிற்கிறதோ,
சிறை வாசமின்றி
அறிவு வளர்ச்சிக்கு
எங்கே பூரண
விடுதலை உள்ளதோ,
விடாமுயற்சி எங்கே
தளர்ச்சியின்றி
பூரணத்துவம் நோக்கி
தனது கரங்களை நீட்டுகிறதோ……
விடுதலைச் சுவர்க்க பூமியில்
எந்தன் பிதாவே!
விழித்தெழுக!
என்தேசம்!"[1]**

என்ற மேற்காட்டிய கவிதை வழி தேசம் நன்முறையில் அமைந்தாலே நாட்டுமக்கள் விடுதலை உணர்வுடன் செயலாற்ற முடியும் என்பது புலனாகிறது.

**பகிர்ந்து வாழ்**

ஓரறிவு முதல் ஆறறிவு படைத்த உயிரினங்களுக்குப் பகுத்துண்டு வாழும் இயல்பு தானாக அமைபவை. அறம் இல்லையேல் சுயநல எண்ணம் புத்துயிர் பெறும். எனவே தான் உண்பதனைப் பகிர்ந்து கொடுத்தல் தலையாய அறமாகக் கருதப்பெற்றது. இது பற்றி வள்ளுவர் கூறுகையில்,

**"பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை" [2]**

என்ற குறட்பா வழி விருந்தோம்பலின் அவசியத்தை வலியுறுத்துகிறார். சகடக்கால் போலச் சுழன்று வரும் செல்வம் என்றும் நிலையில்லாதது. ஆகவே தான் ஏழைகளுக்குப் பகிர்ந்து வாழ்தலே வாழ்வில் இன்பம் அடையலாம். இக்கருத்தினை ஆசிரியர் தமது கவிதையில்,

**"ஏழைகளை ஒடுக்கும்
கொடியவனாய் இராதே!
விளைச்சல் நேரத்தில் பெய்யும்
வீண் மழையைப் போல்
பழிக்கப் படுவாய்!
ஏழைகளுக்குக் கொடு
என்றும் உன்
செல்வம்
செழிப்படையும்"
(க.சேவியர் ராஜப்பா.,
திருடப்பட்ட தேசம். ப. 46)**

என்பர். இங்கு உழைப்பாளரின் மேன்மை அறிந்து கொடுப்பவருக்கே செல்வம் சிறக்கும் என்பது திண்ணம். உழைப்பிற்கு ஏற்ப ஊதியம் நல்குவோர் நன்மை மதிப்பை அடையலாம். பிறரை ஏமாற்றிச் சுரண்டித் துன்புறுத்தி வாழும் முறைமை இன்பமாக அமையாது. பழிவந்து நேரிடும் என்பது ஆன்றோர் வாக்கு.

***சாதி***

சாதி என்பது முன்பு மக்கள் செய்யும் தொழில் ரீதியான சமூக அமைப்போடு இணையப்பட்டது. இதற்கு அடிப்படையே சமயம் என்றும் ஒருசாரார் கருதுவர். புலம்பெயர்ந்த மக்கள் அடிமையாக்கப்பட்ட சூழலில் இனத்தின் பிரிவுத் தோற்றம் பெற்றது. நாளடைவில் பிறப்பு அடிப்படையில் ஏற்றத் தாழ்வினை ஊட்டிய போது சாதியமைப்பு துணையானது. அந்நியரின் ஆதிக்கவர்க்கத்தால் சாதிகள் வேரூன்றி சமூகச் சீரழிவிற்கும் வழிகோலியது. சாதி பற்றிப் பாரதி கூறுகையில்,

**"சாதிப் பிரிவுகள் சொல்லி – அதில்**
**தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்**
**நீதிப் பிரிவுகள் செய்வார் - அங்கு**
**நித்தமும் சண்டைகள் செய்வார்**
**சாதிக் கொடுமைகள் வேண்டாம் - அன்பு**
**தன்னில் செழித்திடும் வையம்"** [3]

என்ற கவிதைகள் வழி சாதிக்கொடுமை அகற்ற பாடுபட்டமை புலனாகிறது. முன்பு ஆங்கிலேயரின் வருகையால் எவ்வாறு தமிழர்கள் அடிமைகளாகப் பட்டனோரோ அதே போன்று சில அரசியல் வாதிகள் கட்சிக்காகச் சாதிப்பிரிவை ஏற்படுத்துகின்றனர். வழக்காடும் நீதிகள் கூட இருளை நோக்கிப் பயணிக்கும் தன்மையினை இன்று காண முடிகின்றது. இக்கருத்தினை மெய்ப்பிக்கும் கவிதை வரிகள் இதோ,

**"புல்வெளிகள்**
**எங்கும்**
**பூட்சு கால்களின்**
**ஆதிக்கம்!**
**சாதிகளெல்லாம்**
**சதிராட்டம் போட்டதில்**
**சின்ன சாதி ஒன்று**
**சின்னா பின்னமாகியது!"**

**(க.சேவியர் ராஜப்பா., திருடப்பட்ட தேசம். ப. 70)**

என்பர். இதன் வழி வன்கவசமாக சாதிப்பிரிவு செயல்படுவதால் உயிரிகள் பல அழியக்கூடும் என்பது தெளிவாகின்றது. நிலையான ஆட்சியை செயலாற்றவே ஏழை மக்கள் வாழ்வினை இன்றைய அரசியல் சின்னா பின்னமாக்கு வதை ஈண்டு உணர முடிகின்றது.

## வன்போர்

ஈழனாகிய இலங்கைத் தமிழன் இனவெறித் தாக்குதலுக்கு ஆட்பட்டதை நாம் அனைவரும் அறிவோம். குறிப்பாக, பெண்கள் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்படுதல், சிறார்கள் தரையில் வீசிக் கொல்லப்படுதல், அவர்களின் உடமைகள் சூறையாடப்பட்டுத் தீக் கிரையாக்கப் படக்கூடும். சுதந்திரம் பெற்று வாழ வழியில்லை என்பதால் அவர்கள் தாமாக இறக்கவும், உரிமையற்ற நிலையில் வாழ்கின்றனர். இத்தகு ஒடுக்கப்பட்ட ஈழத்தமிழனின் போராட்டத் தன்மையினை,

**"ஊரிழந்து**
**உறவிழந்து**
**உணர்விழந்து**
**வாழ்வதை விட**
**சாவது மேல் என்று**
**மனம் நினைத்தாலும்**
**சண்டாளர்**
**சுட்டுத்தான்**
**சாகவேண்டும் என்ற நிலை."**

**(க.சேவியர் ராஜப்பா., திருடப்பட்ட தேசம். ப. 41)**

என்ற கவிதை வழி அறியலாம். இங்கு மனிதநேயமற்ற வன்போர் தாக்குதலால் விடியலைத் தேடிக் கனவுகளோடு வாழ்கிறான் ஈழன். இருப்பினும் இறுதிவரைப் போராடித் தனது உரிமையை நிலைநாட்டும் போர்க்குணம் மிகுந்திருப்பதையும் நாம் அறிய முடிகின்றது. ஈழத்தமிழரின் வீரத்தை உணர்த்தும் முருகு சுந்தரத்தின் கவிதை வரி இதோ,

**"ஈழத் தமிழ்க் குழந்தை**
**பிறக்கும் போதே துப்பாக்கியோடு**
**பிறக்கிறது ஈழத்தில் - கடைசித் தமிழன்**
**இருக்கும் வரை போராட்டம்**
**இருக்கும்….."** [4]

என்பர். இக்கவிதை வழித் தலையைத் துண்டித்தாலும் இறுதிவரை தாய்நாட்டிற்காகப் போராடும் வீரச்செயல் மகத்தானது எனலாம்.

## இன்றைய தேசம்

மனிதனை நேசித்து வாழ் சூழ்நிலை மாறித் தேசத்தை வாசித்துப் பழகும் புதியசிந்தனை இன்று உருவாகி வருகின்றது. இன்றைய சமூகத்தில் உழைப்பினையும், பிழைப்பினையும் நம்பி வாழ முடியவில்லை. உயிருக்கு உறுதி பயக்காவண்ணம் திருடப்பட்டதாக இன்றைய தேசம் இயங்கி வருகின்றது. ஏற்றத் தாழ்வின்றி மனதில் வெறுப்பைத் துடைத்து அழித்து, சகித்து வாழ்ந்தாலே நாடு முன்னேறும். இல்லையெனில் சமூகப் பிரிவு இயல்பாக வேரூன்றி பொருளாதாரம் சீர்க்குலைந்து அநீதி தழைக்கக்கூடும். இத்தகு தேசத்தின் மகிமை பற்றி ஆசிரியர் கருத்தாக,

**"காடுகளை**
**அழித்தாலும்**
**கண்டுகொள்ளா தேசம்!**
**மணற்கொள்ளை**
**நடந்தாலும்**
**மறந்துவிடும் தேசம்!**
**கல்மலைகள்**
**கரைந்தாலும்**
**கவனம் கொள்ளா தேசம்!.....**
**எங்கள்**
**திருடப்பட்ட தேசம்!"**

**(க.சேவியர் ராஜப்பா., திருடப்பட்ட தேசம். ப.** 81)

என்ற கவிதை வழிப் பதிவு செய்கிறார். இங்கு மரம், நீர், மலைகள், மண் போன்ற இயற்கை வளங்கள் களவு செய்யப்பட்டால் அதை யாராலும் மீட்டெடுக்க இயலாது. உலகை ஆளும் தலைவர்கள் கூட அரியணை ஏறி திருத்தினாலும் இந்த தேசம் திருடப்பட்ட தேசமாகவே இயங்குகிறது. மேலும் சுற்றுச் சூழலைப் பாதுகாக்காவிடில் தேசத்தின் வளமையை அதிகரிக்க முடியாது என்பது திண்ணம்.

மற்றொரு கவிதையில் அன்றாடம் நடக்கும் சமூகப் பிரச்சனைகளைப் பட்டியலிடுகையில்,

**"திடீர் உயிர் பறிப்பு**
**தினந்தோறும் கற்பழிப்பு**
**அபலைகள் வாழ்விழப்பு**
**நாள்தோறும் நாட்டுநடப்பு……..**
**சிசுக்கொலையும்**
**பசுக்கொலையும்**
**சகஜமாகி விட்ட**
**இன்று**
**சாராயக் கொலைகளும்**
**அவற்றோடு**
**அன்னியோன்னியமாய்**
**ஆலிங்கனம் செய்வது தான்**
**அபத்தத்திலும்**
**அபத்தம்………"**

**(க.சேவியர் ராஜப்பா., திருடப்பட்ட தேசம். ப.** 87)

என்கிறார். இங்கு குடிகுடியைக் கெடுப்பதோடு மட்டுமின்றி குடிக்கொண்டிருக்கும் தேசத்தின் வாழ்வினைச் சேர்ந்துச் சீரழிக்கின்றது. பாலியல் வன்முறை தொடங்கி பசுக்கொலை வரை நாள்தோறும்

உயிரைப் பறிக்கும் சமூகத்தின் அவலநிலை ஈண்டு நோக்கத்தக்கது.

## காடுகளின் அழிவு

மேய்ச்சல் நிலங்கள் சுரண்டப்பட்டு வருவதால் இயற்கை வளங்கள் அழிக்கப்படுகின்றது. தொழிற் புரட்சிக்குப் பின்னர் மரங்களை அழித்து நீர்த் தேக்கங்களைக் குறைத்து வருகின்றோம். செயற்கையான தாக்கத்தால் தரிசு நிலங்கள் அனைத்தும் வீணாகிக் கட்டிடங்களாக மாற்றம் கொண்டு மண் வளத்தைக் குறைக்கின்றது. மக்களால் ஏற்பட்ட சேதத்தைச் சரிசெய்யத் தேவையான காடுவளர்ப்பு அவசியம் இல்லையேல் வனங்களை மீட்டெடுக்க முடியாது. மரங்கள் அழிக்கப்படும் தன்மையினை,

**"அடர்த்தியான**
**காடுகளில்**
**நடந்தபோது**
**காகிதத்தைக் காணோம்!**
**இன்று**
**வெக்கை மிகு**
**காகிதக் கிடங்கில் நிற்கிறேன்…..**
**மரங்களைக் காணோம்!"**

**(க.சேவியர் ராஜப்பா., திருடப்பட்ட தேசம். ப. 105)**

என்ற கவிதை வழி உணர்த்துகிறார் ஆசிரியர். ஆரோக்கியம் நல்கும் இயற்கை அன்னையை வளப்படுத்தாமல் அழிப்பது அடுத்த தலைமுறைக்கு ஆபத்தாகும். இங்ஙனம் மனிதன் காடுகளை அழிப்பதால் புல், பூண்டு, பறவை மற்றும் விலங்கினங்கள் வாழ்வு கேள்விக்குறியாகி விடக்கூடும். உதாரணமாகப் பறவைகள் நாடோடிகளால் இடம்பெயரும் காட்சி இதோ,

**"...........தேடித்தேடி அலுத்தாலும்**
**அலைபேசி கோபுரத்தின்**
**அடியில் மட்டும்**
**தேட மறந்தேன்**
**செத்துப் போன**
**சிட்டுக்குருவிகளை…!"**

**(க.சேவியர் ராஜப்பா., திருடப்பட்ட தேசம். ப. 108)**

என்ற கவிதை வரிகள் உணர்த்துகின்றன. ஈண்டு மனிதன் செய்யும் தவறான செய்கையால் ஒவ்வொரு உயிரிகளும் வாழ்வு இழக்கும் என்பது வெளிப்படை. இது ஓர் சூழலியல் மாசுபட்டிற்கு நற்சான்றாகும். இதே கருத்தினை உணர்த்தும் ஹைக்கூக் கவிதை வரிகள்

**"விடியலின் அடையாளம்**
**அழிந்த வண்ணமாய் இருக்கிறது**
**சிட்டுக்குருவி!"** [5]

இதன் வழி இயற்கையைப் பேணிப் பாதுகாப்பது நமது கடமை என்ற எதிர்காலச் சிந்தனை ஈண்டு நோக்கத்தக்கது. வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்! நாட்டுநலன் காப்போம்! என்பது திண்ணம்.

## சுனாமி

சுனாமி பெரிய அளவில் உருப்பெற்று எல்லாப் பொருட்களையும் தன்னுடன் எடுத்துச் செல்லும். இத்தகு ஆழிப்பேரலையால் லட்சக்கணக்கான கடலோரப் பூக்கள் சுருட்டி நீருக்குள் சென்றன. நிலநடுக்கம் தொடங்கி கடல் நீர் பின்னடைவு வரை இயற்கைச் சீற்றம் ஏற்பட்டு சமூகத்தைப்

புரட்டியது. அசாதாரமான ராட்சத அலைகள் உருவாகி உலக நாடுகளின் பொருளாதாரத்தையே வீழ்த்தியது. சுனாமி பற்றி ஆசிரியர் கருத்து,

**"ஊரெல்லாம்**
**உயிர் வதைத்து**
**பிண அறுவடை செய்தது**
**தண்ணீர் தேசம்…..**
**ஆயிரம் வருடம்**
**ஆயினும் சொல்லும்**
**சோகச் சுனாமி"**

**(க.சேவியர் ராஜப்பா., திருடப்பட்ட தேசம். ப. 75)**

என்ற கவிதை வரிகள் தேசம் முழுவதும் கடல் நீரில் மூழ்கிய தன்மையினை எடுத்தியம்புகின்றது. அறுவடை செய்யும் வரப்பான நீர்த் தேக்கமே பிண்டச் சோற்றைக் கரைக்கும் கரையாக மாறியமை வருந்தத்தக்கது. சுனாமியின் கோரத் தன்மையினைச் சுட்டும் இணைய கவிதை இதோ,

**"பத்தோடு மூன்றாண்டுகள்**
**பவ்வியமாய் கழிந்தாலும்**
**பல்லாயிரம் உயிர்களை**
**பாவம் பாராமல்**
**பறித்துச் சென்றிட்ட**
**பயங்கர நிமிடங்கள்**
**பதித்துப்போன தடங்கள்**
**பல்லாண்டுகள் சென்றாலும்**
**மாறாதோ இந்த**
**சுனாமி தந்த**
**வடுவும் வலியும்………?**"

எனலாம். இழப்பு அதிகமாய் இருந்தபின் தனக்குத் தானே ஆறுதல் கூறுவது வேடிக்கையான செயலாகும். மெல்லிய அலையாய் வந்து கரையைக் கடப்பவரின் பாதத்தைத் தொட்டு வருடும் கடலன்னையின் சீற்றம் நாம் மறக்க மாட்டோம்.

## முடிவுரை

இவ்வாறாக, மனிதன் சமூகம் சம்பந்தமான எந்த விஷயத்திலும் அலட்சியமின்றி அக்கறையோடு செயல்பட்டால் எல்லாம் வெற்றியே. தான், தனக்கு என்ற நிலையிலிருந்து விடுபட்டு பொது நலத்தோடு வாழ்ந்தால் சமுதாயம் வளர்ச்சி அடையும். மேலும் சாதி, சம்பிரதாயம், மூடப்பழக்கங்களும் நிறைந்து வறுமையில் வாழ்ந்தாலும் கூட்டமாக மக்கள் விவேகத்துடன் வாழ்ந்தாலே நிலையான வளர்ச்சியை நோக்கிச் செல்லலாம். புதிய தேசத்தை உருவாக்க உறுதி கொள்வோம்! வளர்ச்சியும் காண்போம்!

## அடிக்குறிப்புகள்

1. **குறள். 322**
2. **சுப்பிரமணிய பாரதியார், சி. பாரதியார் கவிதைகள், ப. 214**
3. **WWW. eluthu.com**
4. **WWW.Jayaprathan.word press. Com**
5. **WWW. safnapoems.blogspot.com**
6. **WWW. Wikisource.org**

## துணைநூற்பட்டியல்


1. சுப்பிரமணிய பாரதியார்., சி ., பாரதியார் (2007). கவிதைகள், லியோ புக் பப்ளிஷர்ஸ், சென்னை. மறுபதிப்பு.
2. சேவியர் ராஜப்பா., க. –(2017). திருடப்பட்ட தேசம், தமிழ்வாசல் பதிப்பகம், மதுரை. முதற்பதிப்பு-
3. பரிமேலழகர் உரை., (2007). திருக்குறள், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை. ஏழாம் பதிப்பு.